# ஊடக அறிக்கை: ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி – ஆகஸ்ட் 2022

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - சோஷல் இன்டிகேட்டர்

**அறிமுகம்**

இந்த அறிக்கையானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கணிப்பீட்டாய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் சமீபத்தில் நடாத்தப்பட்ட ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி (3வது அலை) ஆய்வின் முடிவுகளை வெளியிடுகின்றது. இலங்கை தற்போது முகம்கொடுக்கும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமையில் பொதுமக்களின் அனுபவங்களையும், ஆர்ப்பாட்டம் மற்றும் தற்போதைய அரசியல் பொருளாதார நெருக்கடி தொடர்பான பல்வேறுபட்ட அம்சங்கள் பற்றிய அபிப்பிராயங்களையும் அறிந்துகொள்ளும் நோக்கில் இந்த ஆய்வு வடிவமைக்கப்பட்டது. ஸ்திரமற்ற அரசியல் நிலைமையினை கருத்தில்கொண்டு, சோஷல் இன்டிகேட்டரின் நாடளாவிய கள வலையமைப்பினைப் பயன்படுத்தி இந்த ஆய்வு மிகக்குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டது.

**முறைமை**

ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டியானது (3வது அலை) பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தினைப் பயன்படுத்தி நான்கு பிரதான இன சமூகங்களைச் சேர்ந்த (சிங்கள, தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம்) 1100 பதிலளிப்பவர்களை மாதிரியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. மாதிரிப் பகிர்வானது நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கிராமிய மற்றும் நகர்ப்புறங்களைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்களை உள்ளடக்குகின்றது. பல கட்டங்களில் எழுமாற்றைக் கொண்ட அடுக்கு மாதிரித் தெரிவு நுட்பத்தைப் பயன்படுத்தி மாதிரியின் இடம் தெரிவுசெய்யப்பட்டதுடன், பதிலளிப்பவர்களைத் தேர்ந்தெடுக்க எழுமாற்று நுட்பம் பயன்படுத்தப்பட்டது. ஆய்வுக்கான வெளிக்களப்பணிகள் 2022, ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் 5ஆம் திகதி வரை நடாத்தப்பட்டன. மக்கள் தொகையின் உண்மையான மாவட்டம் மற்றும் இன விகிதத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தரவுத்தொகுப்பு மதிப்பேற்றப்பட்டது. சமூக அறிவியலுக்கான புள்ளிவிபரவியல் தொகுப்பைப் (SPSS) பயன்படுத்தி தரவுத் தொகுப்பானது பகுப்பாய்வு செய்யப்பட்டது.


**ஆய்வு முடிவுகள்**

**தற்போதைய பொருளாதார நெருக்கடியில் மக்களின் அனுபவங்கள்**

இலங்கை மக்களின் அதி பெரும்பான்மையானவர்கள் பொருளாதார சிரமங்களுக்கு முகம்கொடுப்பதாக தெரிவிக்கின்றனர். கிட்டத்தட்ட 80% தமது வருமானம் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை என தெரிவிக்கின்றனர். இந்த 80% இல் அரைவாசியினர் மிகவும் அதிக சிரமங்களுக்கு முகம்கொடுப்பதாகத் தெரிவிக்கின்றனர். கிராமப்புறங்களைச் சேர்ந்த மக்களை விட நகரப்பகுதிகளில் வசிக்கும் மக்களே அதிக சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.


இவ் ஆய்வு தற்போதைய பொருளாதார நெருக்கடி மக்களது வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது என்பதை ஆராய்ந்தது. 87% இலங்கையர்கள் அதிகரித்த வீட்டு செலவை தாங்கிக்கொள்வது சிரமமாக இருப்பதாகவும், 83% தாங்கள் வாங்கி பழக்கப்பட்ட அதே பொருட்களை தற்போது வாங்குவது இல்லை என்றும் தெரிவிக்கின்றனர். இலங்கையர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் மருந்து வாங்குதல் தொடர்பில் தாங்கள் பொருளாதார சிரமங்களுக்கு முகம்கொடுப்பதாக கூறுகின்றனர். 42% உணவின் அளவை அல்லது ஒரு நாளைக்கான உணவு

வேளைகளைக் குறைத்ததாகக் கூறுகின்றனர். இலங்கையில் மூன்றில் ஒரு பகுதியினருக்கும் அதிகமானோர் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக குறைந்தபட்சம் ஒருவராவது தங்கள் குடும்பத்தில் வேலையை/ தொழிலை இழந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இச்சிரமமானது அனைத்துப் பிரதேசங்களிலும் உணரப்பட்டுள்ளது. இருப்பினும், ஆய்வு முடிவுகளின் படி கிராமப்புற பிரதேசங்களில் இந்தத் தாக்கம் சற்று அதிகமாக இருப்பதாகத் தெரிகின்றது. உணவு உட்கொள்ளுதல் தொடர்பில் பார்க்கும் போது, கிராமப்புற மற்றும் மாநகரசபை பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் சமமான அளவில் கடும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்




**தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு தொடர்பில் சரியான தீர்மானம் எடுப்பது பற்றி தேசிய மட்டத் தலைவர்கள் மீதான நம்பிக்கை**

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு தொடர்பில் தேசிய மட்ட அரசியல் தலைவர்கள் சரியான தீர்மானங்களை எடுப்பார்கள் என்று மக்கள் எந்தளவு நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்று கேட்டபோது, அதிக அளவான மக்கள் அநுரகுமார திசாநாயக மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அடுத்தபடியாக ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாச மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். அநுரகுமார திசாநாயக மீது அனைத்து இனச் சமூகத்தினரும் ஏறக்குறைய சமமான அளவில் நம்பிக்கை வைத்துள்ளனர். ரணில் விக்கிரமசிங்க மீது சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தினரை விட தமிழ் மற்றும் மலையகத் தமிழ் சமூகத்தினர் அதிக நம்பிக்கை வைத்துள்ளனர். சிங்களவர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கும் சற்று அதிகமானவர்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பது தொடர்பில் சரியான தீர்மானத்தை ரணில் விக்கிரமசிங்க எடுப்பார் என்று நம்புவதாகத் தெரிவிக்கின்றனர். சிங்கள சமூகத்தினரை விட கணிசமான அளவு அதிக சிறுபான்மையினர் சஜித் பிரேமதாச மீது நம்பிக்கை வைத்திருக்கின்றனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனையை முறையாக பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தலைவர்களான மகிந்த ராஜபக்ஷ, டலஸ் அழகப்பெரும மற்றும் தினேஷ் குணவர்தன ஆகியோர் அனைத்து இன மக்கள் மத்தியிலும் குறைந்த அளவிலான நம்பிக்கையையே பெறுகின்றனர். ஆய்வு முடிவுகளின் படி, இவர்கள் மத்தியில் மகிந்த ராஜபக்ஷவே, பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் சரியான தீர்மானத்தை எடுப்பார் என்பது தொடர்பில் குறைந்தளவில் நம்பப்படுகின்றவர் ஆவார். அநுரகுமார திசாநாயக மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கிராமப்புற மற்றும் நகர்ப்புற சமூகத்தவர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள அதேவேளையில், கிராமப்புற சமூகத்தவர்களுடன் ஒப்பிடுகையில் அதிக நகர்ப்புற இலங்கையர்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் சரியான தீர்மானத்தை எடுப்பார் என்று சஜித் பிரேமதாச மீது நம்பிக்கை வைத்துள்ளனர்.



**கோட்டா கோ கம ஆர்ப்பாட்டத்தை வழிநடத்திய இளைஞர்கள் யுவதிகள் தொடர்பான மக்கள் அபிப்பிராயம்**




இவ்வாய்வானது கோட்டா கோ கம ஆர்ப்பாட்டத்தை வழிநடத்திய இளைஞர் யுவதிகள் குறித்து பொதுமக்களின் அபிப்பிராயத்தை ஆராய்ந்தது. 84% ஆர்ப்பாட்டமானது சமூகம்/ குடியுரிமை தொடர்பான அக்கறை கொண்ட இளைஞர் யுவதிகளினால் நாட்டை சிறந்த ஜனநாயகம் உடைய நாடாக மாற்றியமைக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். ஆர்பாட்டத்தில் ஈடுபடும் இளைஞர் யுவதிகள் வன்முறைக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் என்பதை 82% ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற அதேவேளை, 88% ஆர்ப்பாட்டமானது அரசியல் தொடர்பில் தெளிவற்ற அதேநேரம் போதைவஸ்து பயன்படுத்தும் குழுக்களால் முன்னெடுக்கப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர் யுவதிகள் தொடர்பில் அனைத்து இனச் சமூகங்களையும் சேர்ந்த அதி பெரும்பான்மையான இலங்கையர்கள் நேர்நிலையான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றனர். இவர்கள் தொடர்பிலான எதிர்நிலையான அபிப்பிராயம் குறைந்தளவு மக்களிடம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அது பெருமளவு சிங்கள சமூகத்தினரிடம் மற்றும் கிராமப்புற பிரதேசங்களில் சேர்ந்தவர்கள் மத்தியிலும் காணப்படுகின்றது.

**ஜனாதிபதி செயலக வளாகத்தில் இருந்து ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றிய விதம் தொடர்பில் பொதுமக்களின் அபிப்பிராயம்.**

ஜனாதிபதி செயலக வளாகத்தில் இருந்து ஆர்ப்பாட்டக்காரர்களை அரசாங்கம் அகற்றிய விதத்தை 66% அனுமதிக்கவில்லை

**பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அவசரகாலச் சட்டம் தொடர்பில் பொதுமக்களின் அபிப்பிராயம்**

2022ஆம் ஆண்டு ஜூலை 27ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அவசரகாலச் சட்டத்தை 65% அனுமதிக்கவில்லை. இருப்பினும் 28% சிங்களவர்களும் நான்கில் ஒரு பகுதி தமிழ் சமூகத்தினரும் அனுமதிக்கின்றனர்.

**தற்போதைய அரசாங்கத்திற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்வைத்த முன்மொழிவுகள் தொடர்பான பொதுமக்களின் அபிப்பிராயம்**

தற்போதைய அரசாங்கத்திற்கு ஆர்ப்பாட்டக்காரர்களால் முன்வைக்கப்படுகின்ற முன்மொழிவுகளை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா அல்லது ஏற்றுக்கொள்ளவில்லையா என்பதையும் இந்த ஆய்வு ஆராய்ந்தது. அதி பெரும்பான்மையானவர்கள் அனைத்து முன்மொழிவுகளையும் ஆதரிக்கின்றனர். அனைத்து அரசியல்வாதிகளும் கணக்காய்வுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் மற்றும் அவர்களின் கணக்கில் வராத சொத்துக்கள் அரசால் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்று அனைத்து இலங்கையர்களும் நம்புகிறார்கள். பத்தில் ஒன்பது பேர் பொதுத்தேர்தல் விரைவில் நடத்தவேண்டும் என்று நினைக்கின்றார்கள். 87%, 20ஆவது திருத்தம் நீக்கப்பட்டு 19ஆவது திருத்தம் போன்ற ஒன்று கொண்டுவரப்படல் வேண்டும் என்று கருதுகின்றனர். 80% இற்கும் அதிகமான இலங்கையர்கள் நாடு தற்போதைய நெருக்கடியிலிருந்து மீளும் வரை பாராளுமன்றத்தில் இருக்கும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று நம்புகின்றார்கள்.

நான்கில் மூன்று பகுதியினரிற்கும் அதிகமானோர் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படல் வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். எவ்வாறாயினும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான ஆதரவு சிங்கள சமூகத்தவர்கள் மற்றும் மாநகரசபைப் பிரதேசங்களில் வசிப்பவர்கள் மத்தியில் சற்று குறைவாகவே காணப்படுகின்றது.




**சர்வதேச சமூகம் தொடர்பான அபிப்பிராயம்**

சர்வதேச சமூகம் தொடர்பில் மக்களின் அபிப்பிராயத்தை அறியும் நோக்கில் தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு உதவும் என தாங்கள் நினைக்கும் நாட்டைக் குறிப்பிடுமாறு இந்த ஆய்வில் மக்களிடம் கேட்கப்பட்டது. இலங்கையின் நான்கில் ஒரு பகுதியினர் தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க உதவும் முதலாவது நாடாக சீனாவை தரவரிசைப்படுத்துகின்ற அதேவேளை கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பகுதியினர் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு உதவும் நாடுகளாக அமெரிக்கா மற்றும் இந்தியாவை தரவரிசைப்படுத்துகின்றனர். இலங்கைக்கு உதவும் என சீனா மீது குறிப்பிட்டளவு அதிக நம்பிக்கை மக்களுக்கு இருந்தபோதிலும் சிங்கள சமூகத்தவர் மத்தியில் உதவும் நாடுகள் தொடர்பில் பல்வேறு அபிப்பிராயத் தெரிவுகள் உள்ளன. இலங்கைக்கு எந்த நாடு அதிக ஆதரவை அளிக்கும் என்பதில் சிங்களவர்களுக்கு கலவையான கருத்து உள்ளது. நெருக்கடியில் இருந்து மீள இலங்கைக்கு உதவும் முதலாவது நாடாக இந்தியா இருக்கின்றது என சிறுபான்மை சமூகத்தினர் நம்புகின்றனர்

**பரவியுள்ள நம்பிக்கையின்மை**

நாட்டின் பொருளாதாரம் சீர்நிலையடைதல் தொடர்பில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை அல்லது நம்பிக்கையின்மை பற்றி ஆய்வு அறியமுற்பட்டது. ஆய்வு முடிவுகளைப் பொறுத்தவரையில் நாட்டின் எதிர்கால பொருளாதாரம் தொடர்பில் மிகவும் அதிக நம்பிக்கையின்மை காணப்படுகின்றது. தற்போதைய பொருளாதாரச் சரிவில் இருந்து மீள மிக நீண்டகாலம் செல்லும் என 58% கருதுவதுடன் 20% அது தொடர்பில் நிச்சயமில்லை என்றும் தெரிவிக்கின்றனர். இந்த நம்பிக்கையின்மை அனைத்து இன சமூகங்கள், நகர்ப்புற மற்றும் கிராமப்புற பிரதேசங்களில் வசிக்கும் சமூகத்தவர்கள் முழுவதிலுமாக காணப்படுகின்றது.

**முற்றும்**